3. தகவல் கோரல்.

(அ) நாச்சியார்கோவில் நெற்களஞ்சியத்திலிருந்து சிவில் சப்ளைஸ் அதிகாரிகள் நெல்லை எடுத்துச் சென்றுவிட்டது குறித்து—

திரு. கோவை செழியன் : நேற்று நான் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். தாங்கள், அந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்குப் பதில் கேள்வி நேரத்திலே கேள்வி-பதிலாகச் சொல்லப் பட்டு விட்டதால் அதைப் பற்றி விவாதிக்க அவசியமில்லை என்று சொல்லி விட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர் மாதவன் அவர்கள் என்னுடைய கவனத்திற்கு அந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் வரவில்லை, பின்னாலே பதில் சொல்கிறேன் என்றுதான் சொன்னார்கள். அந்த விவரம் அவருடைய கவனத்திற்கு வருவதற்கு முன்னாலேயே தாங்கள் "அதற்குப் பதில் சொல்லியாகிவிட்டது" என்ற பதிலை எனக்கு அனுப்புகிறீர்கள். நாச்சியார்கோயில் சிவில் சப்ளைஸ் டிப்பார்ட்மெண்டில் உள்ளவர்கள் நெற்களஞ்சியத்திலிருந்து நெல்லை எடுத்துச் சென்று விட்டதாகவும், அதைப் பற்றிய விவரங்களை அமைச்சர் அவர்கள் பின்னால் சொல்லுகிறேன் என்றும் சொன்னார்கள். ஆனால், அதற்கு முன்னால் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்குப் பதில் அனுப்பிவிட்டீர்கள். அமைச்சருடைய பதிலை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்லுகிறார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, நேற்றே கலெக்டர் அவர்கள் இதுபற்றி விசாரணை செய்து அறிக்கை அனுப்ப வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்திருந்தாலும் அது பற்றி விசாரிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே பெரிய பிரச்சினை இருப்பதாகக் கருதவில்லை. அப்படி நெல் எடுத்தது உண்மைதான் என்று தெரிகிறது. எந்தச் சூழ்நிலையில் அப்படி எடுத்தார்கள் என்பது அறிக்கையில் இருந்து தெரியும். தவறு நடைபெற்றிருக்கிறது.

(4) ஒத்திவைப்புத் தீர்மானம்.

மின்சார நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே.டி.கே. தங்கமணி என். கே. பழனிசாமி, எம. சுரேந்திரன், கே. என். குமாரசாமி ஆகியவர்கள் தமிழ் நாட்டிலுள்ள மின்சார நிலை குறித்து விவாதிக்க வேண்டுமென்று ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி பேரவையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து விவாதிப்பதற்கு உரியது என்பதைப் பற்றி எடுத்துக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.